[2019] 13 எஸ்.சி.ஆர். 961

எம். ஸ்ரீகாந்த்

எதிராக

தெலுங்கானா மாநிலம் மற்றம் ஒருவர்

(குற்றவியல் மேல்முறையீடு எண்: 1586/2019)

அக்டோபர் 21,2019

மாண்புமிகு நீதியரசர் திரு. நவீன் சின்ஹா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. பி. ஆர். கவாய்

குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 – பிரிவு 482 – கீழ் அதிகார வரம்பைப் பயன்படுத்துதல் – எதிர்மேல்முறையீட்டாளர் எண்.2 – புகார்தாரர், அவரது சகோதரரான குற்றம் சாட்டப்பட்ட எண். 1 உட்பட ஒன்பது நபர்கள் மீது புகார் அளித்தார் – புகார்தாரரின் கூற்றுப்படி, சர்ச்சைக்குரிய அந்தச் சொத்து அவரது தந்தைக்குச் சொந்தமானது; மேலும் அவரது மறைவுக்குப் பிறகு, அந்தச் சொத்து புகார்தாரர், அவரது மூன்று சகோதரிகள் மற்றும் முதல் குற்றம் சாட்டப்பட்ட எண். 1 ஆகியோரால் வாரிசுரிமை அடிப்படையில் பெறப்பட்டது – தனது தந்தை ஒரு கட்டுமான நிறுவனத்துடன் சொத்து மேம்பாட்டு ஒப்பந்தம் செய்திருந்ததாகவும், அந்த நிறுவனம் அந்த உரிமைகளை 3–வது குற்றம் சாட்டப்பட்டவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் ஒரு நிறுவனத்திற்கு மாற்றிக்கொடுத்ததாகவும், தனது தந்தையின் மறைவுக்குப் பிறகு அந்த 3–வது குற்றம் சாட்டப்பட்டவர் அந்தச்

சொத்திற்குள் அத்துமீறி நுழைய முயன்றதாகவும் அவர் உறுதியாகத் தெரிவித்துள்ளார் – புகார் பதிவு செய்யப்பட்டது – பல்வேறு புகார்கள் மற்றும் வழக்குகள் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக அவரது சகோதரிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கான உத்தரவு – புகார்தாரர் மற்றும் அவரது சகோதரிகள் தரப்பிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராகப் பல்வேறு புகார்களும் மற்றும் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன – அந்தப் புகாரில், குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 பல்வேறு ஆவணங்களையும் மற்றும் ஒரு உயிலையும் போலியாகத் தயாரித்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது – முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிடுதல் – குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–ஆல் அந்த நிலத்தைக் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 5–க்கு உள்குத்தகைக்கு விட அனுமதிக்கப்பட்டதாகக் கூறப்படும், குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4 என்பவரால் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 482–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் மனு தள்ளுபடி செய்யப்பட்டது – குற்றம் சாட்டப்பட்டவர்கள் எண் 5 முதல் 9 வரை உள்ளவர்களுடைய மனுக்கள் அனுமதிக்கப்பட்டன – தற்போதைய இந்த மேல்முறையீடுகள் புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4 ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன – புகார்தாரர், அவரது சகோதரிகள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 ஆகியோருக்கு இடையே வாரிசுரிமை அடிப்படையில் நிலவும் சர்ச்சைக்குரிய வாரிசுரிமை கோரிக்கையை இந்தப் புகார் வெளிப்படுத்துகிறது – வாரிசுரிமை அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 மட்டுமே அந்தச் சொத்தின் முழுமையான

பயனாளி அல்ல என்பதையும், அந்தச் சொத்து புகார்தாரர் மற்றும் அவரது சகோதரிகளுக்கும் உரிமையானது என்பதையும் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4 முழுமையாக அறிந்திருந்தார் என்பதற்கு அந்தப் புகாரில் எவ்விதமான குறிப்பும் இல்லை – இந்த உண்மையை அறிந்து கொண்டே, அவர் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–உடன் இணைந்து, ஒரு போலி உயிலை உருவாக்கி, அதன் மூலம் உள்நோக்கத்துடன் இந்த வாடகை ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார் என்பதைக் காண்பிப்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை – குற்றம் சாட்டப்பட்டதாகக் கூறப்படும் அந்தச் சதித் திட்டம், எந்த முறையில் அல்லது எவ்வாறு தீட்டப்பட்டது என்பது குறித்துப் புகாரில் எவ்விதக் குறிப்போ அல்லது விளக்கமோ இல்லை – புகார்தாரரின் தந்தையும் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 3–ம் ஒரு மேம்பாட்டு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டனர் என்பதும், அது அவரது தந்தையின் வாழ்நாளிலேயே ரத்து செய்யப்பட்டுவிட்டது என்பதும் புகாரின் மூலமே தெரியவருகிறது – எழுப்பப்பட்டுள்ள இந்தப் பிரச்சினைகள், சட்டப்படியான வாரிசுகளுக்கு இடையே நிலவும் வாரிசுரிமை தொடர்பான ஒரு உரிமையியல் தகராறையே பிரதிபலிக்கின்றன – வாரிசுரிமை தொடர்பான ஒரு தகராறை, குற்றவியல் விசாரணை நடவடிக்கைகளின் மூலம் தீர்மானிக்க முடியாது – இதனை ஒரு பொருத்தமான உரிமையியல் விசாரணை மூலமாக மட்டுமே செய்ய முடியும் – இது தொடர்பாக, புகார்தாரர் உட்பட பல்வேறு தரப்பினரால் ஏற்கனவே உரிய உரிமையியல் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன – மேலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் எண் 5 முதல் 9 வரை உள்ளவர்களுக்கு எதிராகத்

விசாரணை நடத்துவதற்கு போதிய ஆதாரங்கள் ஏதும் இல்லை என்று தனி நீதிபதி Single Judge சரியாகக் கண்டறிந்துள்ளார் – அசல் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–ன் வழக்கானது, பஜன் லால் *வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் உருவாக்கப்பட்ட (1) மற்றும் (3)–வது வகைப்பாடுகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது – மேலும், புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அப்படியே உண்மை என்று ஏற்றுக்கொண்டாலும்கூட, அவருக்கு எதிராகத் தொடர்வதற்கு விசாரணை நடத்துவதற்கு போதிய ஆதாரங்கள் ஏதும் இல்லை – குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகள் ரத்து செய்யப்படுகின்றன – தண்டணைச் சட்டம், 1860 – பிரிவுகள் 120–பி, 380, 420, 448.*

இந்த மேல்முறையீடுகளைத் தீர்வளித்து, நீதிமன்றம்

தீர்வு :– இப்புகார் புகார்தாரர், அவரது சகோதரிகள் மற்றும் அவரது சகோதரரான குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 ஆகியோருக்கு இடையே வாரிசுரிமை அடிப்படையில் நிலவி வரும் ஒரு சர்ச்சைக்குரிய சொத்து உரிமைக் கோரலை வெளிப்படுத்துகிறது. சொத்தின் பரப்பளவு, அது புகார்தாரரின் பெற்றோருக்கு வந்து சேர்ந்த விதம் மற்றும் தனது உடன்பிறந்தவர்களுடன் தனக்குள்ள போட்டித் தன்மையுள்ள உரிமை ஆகியவற்றுடன் புகார்தாரர் முரண்படுவதையும் வெளிப்படுத்துகிறது. வாரிசுரிமை மூலம் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 மட்டுமே அந்தச் சொத்தின் ஒரே பயனாளியல்ல என்பதும், அந்தச் சொத்து புகார்தாரர் மற்றும் அவரது சகோதரிகளுக்கும் வந்து சேர்ந்தது என்பதும்

தற்போதைய மேல்முறையீட்டாளரான குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கு முழுமையாகத் தெரியும் என்று இந்தப் புகாரில் ஒரு சிறு குறிப்பு கூட இல்லை. மேலும், இது தெரிந்திருந்தும் அவர் ஒரு பொய்யான மற்றும் புனையப்பட்ட உயிலை உருவாக்கி, குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–உடன் கூட்டுச் சதியில் ஈடுபட்டு இந்தக் குத்தகை ஒப்பந்தத்தில் ஈடுபட்டார் என்பதைக் காட்டவும் எதுவுமில்லை. புகாரில் சதியைப் பற்றியக் குறிப்பு இருந்தாலும், அத்தகைய சதி எந்த முறையில் நடைபெற்றது என்பது குறித்த ஒரு சிறு பரிந்துரை கூட அதில் இல்லை. புகார்தாரரின் தந்தை மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 3 ஆகியோரே ஒரு மேம்பாட்டு ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதும், அது பின்னர் அவரது வாழ்நாளிலேயே ரத்து செய்யப்பட்டது என்பதும் தெரியவருகிறது. மேலும், தற்போது சர்ச்சைக்குள்ளாகியுள்ள இந்தக் குத்தகை ஒப்பந்தம் மேல்முறையீட்டாளருக்கு சாதகமாக நிறைவேற்றப்பட்ட பின்னரே, புகார்தாரர் இந்தப் பிரச்சனைகள் அனைத்தையும் எழுப்பியுள்ளார் என்பதும் வெளிப்படுகிறது. எழுப்பப்பட்டுள்ள இந்தப் பிரச்சனைகள், சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு இடையேயான வாரிசுரிமை தொடர்பான ஒரு உரிமையியல் சர்ச்சையையே பிரதிபலிக்கின்றன என்பது எங்களது தீர்க்கமான கருத்தாகும். ஒரு உயில் மற்றும் உறுதிப்படுத்தல் ஆவணத்தின் கீழான வாரிசுரிமை குறித்த ஒரு தகராறை, ஒரு குற்றவியல் நடவடிக்கையில் எவ்வாறு தீர்மானிக்க முடியும் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதனை ஒரு பொருத்தமான உரிமையியல் நடவடிக்கையின் மூலம் மட்டுமே செய்ய முடியும். அதுமட்டுமன்றி, புகார்தாரர் உட்பட பல்வேறு தரப்பினரால் இது

தொடர்பான உரிமையியல் நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. புகார்தாரர் தனது புகாரில், குற்றம் சாட்டப்பட்டவர் எண் 3–க்கு எதிராக நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண். 1989/1996 மற்றும் தி/ள் பஞ்சாரா கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு எதிராக நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண். 1403/1999 ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தாலும், பிற சட்ட நடவடிக்கைகள் குறித்த எந்தவொரு குறிப்பும் அதில் இடம்பெறவில்லை. தற்போதைய மேல்முறையீட்டாளரான குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4, 2001–ஆம் ஆண்டின் அசல் வழக்கு எண். 506–ல் ஒரு பிரதிவாதி தரப்பினராக 30.10.2009 அன்றுதான் இணைக்கப்பட்டார். [பத்தி 19–21]

1.2 புகார்தாரர் தனது சகோதரரான குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 மற்றும் தனது மூன்று சகோதரிகளுக்கு எதிராக, பாகப்பிரிவினை மற்றும் தனி உடமை கோரி ஏற்கனவே தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 239/2004 தற்போது நிலுவையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவ்வாறிருக்கையில், புகாரில் மோசடியானது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும், அந்த உரிமையியல் வழக்கிலேயே பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். குற்றவியல் நடவடிக்கைக்கு நேர்மாறாக, உரிமையியல் நடவடிக்கையில் முரணான முடிவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பை நிராகரிக்க முடியாது. சர்ச்சைக்குரிய அந்த நிலத்தில் கட்டுமானப் பணிகளைத் தடுப்பதற்காக புகார்தாரர் நீதிப்பேராணை மனு எண்கள் 23017/2009 மற்றும்

23672/2009 ஆகியவற்றைத் தாக்கல் செய்திருந்த போதிலும், அவை 28.10.2009 அன்று தள்ளுபடி செய்யப்பட்டன. இருப்பினும், இது தொடர்பான எந்தவொரு குறிப்பும் புகாரில் இடம்பெறவில்லை. புகார்தாரர் மற்றும் அவரது சகோதரிகள் 20.03.2015 அன்று முகமது காலித் ஷெரீப் என்பவருக்கு ஆதரவாக விற்பனை ஒப்பந்தம் மற்றும் ரத்து செய்ய முடியாத குறிப்பிட்ட பொது அதிகாரப் பத்திரம் ஆகியவற்றை நிறைவேற்றிக் கொடுத்துள்ளனர். பெட்ரோல் பங்க் அமைத்தல் மற்றும் அதற்குரிய தடையில்லாச் சான்றிதழ் வழங்குதல் போன்றவை தொடர்பாகப் பல்வேறு வழக்குகள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 24.11.2010 அன்று, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 156(3)-ன் கீழ், ஒரு முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து புலனாய்வு மேற்கொள்வதற்காக இந்தப் புகார் காவல்துறைக்கு அனுப்பப்பட்டது. 30.08.2017 தேதியிட்ட தனது இறுதி அறிக்கையில், புலனாய்வின் போது எந்தவொரு சதியையும் நிரூபிப்பதற்கான எவ்வித ஆதாரங்களும் கிடைக்கவில்லை என்று காவல்துறை கருத்துத் தெரிவித்துள்ளது. கற்றறிந்த நீதிபதியே தனது தீர்ப்பின் 8-வது பத்தியில், சர்ச்சைக்குரிய ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் போலியானவை என்றோ அல்லது ஏமாற்றும் நோக்கில் யாரேனும் ஒருவரைப் போல ஆள்மாறாட்டம் செய்துள்ளனர் என்றோ எவருடைய வாதமும் இல்லை. ஆவணங்களைப் புனைந்தது மற்றும் போலியாக உருவாக்கியது தொடர்பான அனைத்துக் குற்றச்சாட்டுகளும், அந்தப் போலி ஆவணங்களின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 குத்தகை ஒப்பந்தத்தைச் செயல்படுத்தியது தொடர்பான

குற்றச்சாட்டுகளும் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–க்கு எதிராக மட்டுமே உள்ளன என்பதைக் கண்டறிந்த பிறகு, கற்றறிந்த நீதிபதி குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கு எதிராகவும் அந்த வழக்கை ரத்து செய்யத் தனது அதிகார வரம்பைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். எந்த அளவுகோல்களைப் பயன்படுத்தி மற்ற குற்றம் சாட்டப்பட்டவர்களின் மனுக்கள் அனுமதிக்கப்பட்டவோ, அதே அளவுகோல்களை உயர் நீதிமன்ற கற்றறிந்த நீதிபதி தற்போதைய குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கும் பயன்படுத்தியிருக்க வேண்டும். எந்த அளவுகோல்களைப் பயன்படுத்தி மற்ற குற்றம் சாட்டப்பட்டவர்களின் மனுக்கள் அனுமதிக்கப்பட்டவோ, அதே அளவுகோல்களைக் கற்றறிந்த நீதிபதி தற்போதைய குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கும் பயன்படுத்தியிருக்க வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் எண் 5–ஆன HPCL நிறுவனம் மற்றும் அதன் அதிகாரிகளான குற்றம் சாட்டப்பட்டவர்கள் 6 மற்றும் 9 ஆகியோருக்கு எதிராகவும், சான்றுக் கையொப்ப சாட்சிகள் என்ற காரணத்திற்காகவே வழக்கில் சேர்க்கப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்கள் 7 மற்றும் 8 ஆகியோருக்கு எதிராகவும் தொடர் நடவடிக்கை எடுக்க எந்த ஆதாரமும் இல்லை என்று கற்றறிந்த தனி நீதிபதி சரியாகவே கண்டறிந்துள்ளார். கற்றறிந்த தனி நீதிபதி, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 482–ன் கீழ் தனக்குள்ள அதிகார வரம்பைச் சரியாகவே பயன்படுத்தியுள்ளார். அசல் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–ஐப் பொறுத்தவரை, இந்த நீதிமன்றம் பஜன் லால் வழக்கில் வகுத்துள்ள (1) மற்றும் (3) ஆகிய பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தலாம். புகாரில் உள்ள குற்றச்சாட்டுகளை அப்படியே ஏற்றுக்கொண்டாலும்கூட, குற்றம்

சாட்டப்பட்டவர் எண் 4–க்கு எதிராகத் தொடர் நடவடிக்கை எடுக்க எந்த ஆதாரமும் இல்லை. குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடர்வது என்பது, சட்ட நடைமுறையைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர வேறு எதுவுமில்லை. அந்த வகையில், அவரது மேல்முறையீடு அனுமதிக்கப்படுவதற்கு தகுதியானது. குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–ஆல் தாக்கல் செய்யப்பட்ட கிரிமினல் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. ஐதராபாத், மத்திய குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கு எதிராக நிலுவையில் உள்ள குற்ற எண். 311/2010–ன் குற்றவியல் நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்படுகின்றன. அசல் புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு அனுமதி மனுக்கள் 9160–61/2017 மூலமான குற்றவியல் மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. [பத்தி 22–28]

ஹரியானா மாநிலம் மற்றும் பலர் எதிர் பஜன் லால் மற்றும் பலர் (1992) துணை 1 எஸ்.சி.சி 335 : [1990] 3 துணை எஸ்.சி.ஆர் 259 – சார்வுரப்பட்டுள்ளது.

சர்தூல் சிங் எதிர் நசிப் கவுர் (1987) துணை எஸ்.சி.சி 146 – குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>வழக்குச் சட்டக் குறிப்பு</u>

[1990] 3 துணை எஸ்.சி.ஆர் 259 பத்தி 15 சார்வுரப்பட்டுள்ளது

(1987) துணை எஸ்.சி.சி 146 பத்தி22 குறிப்பிடப்பட்டுள்ளது

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு:– குற்றவியல் மேல்முறையீட்டு எண். 1586/2019.

தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களுக்கான ஹைதராபாத்தில் உள்ள உயர் நீதிமன்றம், குற்றவியல் மனு எண் 6609/2013–ல் 01.06.2017 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து

உடன்

குற்றவியல் மேல்முறையீட்டுஎண்.1587–1588/2019.

கே. எம். நடராஜ், ஏஎஸ்ஜி, டி. ராமகிருஷ்ண ரெட்டி, திருமதி டி. பாரதி ரெட்டி, ஷகில் அகமது சையத், உஸ்மி ஜமீல் ஹுசைன், சஞ்சய் கபூர், செல்வி மேகா கர்ன்வால், பாரத் கங்காதரன், கௌசர் ஹுசைன், எஸ். உதய குமார் சாகர், செல்வி சுவாதி பரத்வாஜ், வழக்கறிஞர்கள் தோன்றியத் தரப்பினர்களுக்காக முன்னிலையாகினர்.

நீதிமன்றத்தின் தீர்ப்பை **மாண்புமிகு நீதியரசர் பி. ஆர். கவாய்** அவர்கள் வழங்கினார்

1. சிறப்பு அனுமதி மனுக்கள் இரண்டிலும் அனுமதி வழங்கப்பட்டது.

2. இந்த இரண்டு மேல்முறையீடுகளும், தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களுக்கான ஹைதராபாத் உயர் நீதிமன்றத்தின் தனியமர் நீதிபதியால் 01.06.2017 அன்று

பிறப்பிக்கப்பட்ட பொதுவான தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து எழுகின்றன.

3. அசல் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–ஆன எம். ஸ்ரீகாந்த் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் சிறப்பு அனுமதி மனு எண் 9156/2017–லிருந்து உருவான இந்த மேல்முறையீடு, ஹைதராபாத் மத்திய குற்றப்பிரிவு காவல் நிலையத்தின் குற்ற எண் 311/2010 தொடர்பான நடவடிக்கைகளை ரத்து செய்யக்கோரி, அவர் கு.ந.மு.ச. பிரிவு 482–ன் கீழ் தாக்கல் செய்த மனுவை நிராகரித்த உயர் நீதிமன்றத் தனி நீதிபதியின் உத்தரவின் அந்த பகுதியை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் புகார்தாரர் தரப்பிலிருந்து தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண்கள் 9160–9161/2017–லிருந்து உருவான மேல்முறையீடுகள், குற்றம் சாட்டப்பட்டவர்கள் 5, 6, 7, 8 மற்றும் 9 ஆகியோருக்கு எதிரான புகாரை ரத்து செய்த உயர் நீதிமன்றத் தனியமர் நீதிபதியின் உத்தரவின் அந்தப் பகுதியை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

4. இந்த மேல்முறையீடுகள் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த வழக்கின் சுருக்கமான பொருண்மைகள் பின்வருமாறு:

அசல் புகாரில் உள்ளவாறு தரப்பினர்கள் இங்கு வரிசைப்படுத்தி இங்கு குறிப்பிடப்படுகின்றனர். S.L.P. (குற்றவியல்) எண் 9156/2017–ல் 2–வது எதிர்மேல்முறையீட்டாளராக உள்ள பாத்திமா ஹஸ்னா (இனிமேல் "புகார்தாரர்" எனக் குறிப்பிடப்படுவார்), குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–ஆன அக்ரமுதீன் ஹசனின் சகோதரி ஆவார். புகார்தாரர் குற்றம்

சாட்டப்பட்ட எண்.1 உட்பட ஒன்பது நபர்கள் மீது தனிப்பட்ட புகார் அளித்திருந்தார். அந்தப் புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் சுருக்கம் என்னவென்றால்: ஹைதராபாத், நாராயணகுடாவில் உள்ள கதவு எண் 3–5–1102 கொண்ட வீடானது, புகார்தார்ரின் தந்தை அப்சலுதீன் ஹாசனுக்கு சொந்தமானது, அவர் 28.05.1996 அன்று இறந்தார். அப்சலுதீன் ஹசன், தனது தாயார் கைருன்னிசா பேகம் சாஹேபா 12.12.1966 அன்று அளித்த வாய்மொழி தானம் மற்றும் அந்த வாய்மொழி தானத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் ஆகியவற்றின் அடிப்படையில், அவரது தாயின் மறைவுக்குப் பிறகு அந்தச் சொத்தைத் தனது வசத்தில் வைத்திருந்தார். தனது தந்தை அப்சலுதீன் ஹசன் மறைந்த பிறகு, அந்தச் சொத்தானது தனக்கும், தனது மூன்று சகோதரிகளுக்கும் மற்றும் தனது சகோதரரான குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–க்கும் வாரிசுரிமை அடிப்படையில் வந்து சேர்ந்தது என்பது புகார்தாரரின் வாதமாகும். தனது தந்தை 25.05.1989 அன்று தி/ள் பஞ்சாரா கட்டுமான தனியார் நிறுவனம் லிமிடெட் நிறுவனத்துடன் ஒரு மேம்பாட்டு ஒப்பந்தத்தைச் செய்திருந்தார் என்று புகாரில் மேலும் கூறப்பட்டுள்ளது. இருப்பினும், அந்த மேம்பாட்டு ஒப்பந்தம் அவரது தந்தையின் வாழ்நாளிலேயே ரத்து செய்யப்பட்டது. தனது தந்தையின் மறைவுக்குப் பிறகு, குற்றம் சாட்டப்பட்டவர் எண் 3–ஆன ஆபித் ரசூல் கான் அந்தச் சொத்திற்குள் அத்துமீறி நுழைய முயன்றார் என்று புகார்தாரர் மேலும் தெரிவித்துள்ளார். அது தொடர்பாக அவர் அளித்த புகாரின் பேரில், 14.06.1996 அன்று இந்தியத் தண்டனைச் சட்டப்

பிரிவுகள் 448 மற்றும் 380 ஆகியவற்றின் கீழ் தண்டிக்கப்படத்தக்க குற்றங்களுக்காகக் குற்ற எண் 159/1996 பதிவு செய்யப்பட்டது.

5. அதன் பிறகு, தி/ள் பஞ்சாரா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தனது உரிமைகளை, குற்றம் சாட்டப்பட்டவர் எண் 3–ஆன ஆபித் ரசூல் கானைப் பிரதிநிதியாகக் கொண்ட தி/ள் என்.ஆர்.ஐ ஹவுசிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு மாற்றிக் கொடுத்த ஓர் ஆவணம் இருப்பதை தான் தெரிந்துகொண்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். அந்தச் சம்பவம் தொடர்பாக, இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் 418, 420 மற்றும் 120–B ஆகியவற்றின் கீழ் தண்டிக்கப்படத்தக்க குற்றங்களுக்காக, தி/ள் பஞ்சாரா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிடெட் மற்றும் தற்போதைய வழக்கின் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 3 உட்பட ஏழு நபர்களுக்கு எதிராகக் குற்ற எண் 177/1996 என்ற மற்றொரு புகார் பதிவு செய்யப்பட்டது. மேற்படி வழக்குக் காரணத்திற்காக, புகார்தாரர் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 3 மற்றும் பிறருக்கு எதிராக நிரந்தரத் தடை உத்தரவு கோரி அசல் வழக்கு எண் 1989/1996–ஐயும் தாக்கல் செய்திருந்தார். புகார்தாரரின் சகோதரிகள், குற்றம் சாட்டப்பட்டவர் எண் 3–ஆன ஆபித் ரசூல் கான் மேலாண் இயக்குநராக இருந்த தி/ள் பஞ்சாரா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு எதிராக அசல் வழக்கு எண் 1403/1999–ஐத் தாக்கல் செய்திருந்தனர். புகார்தாரரின் கூற்றுப்படி, மேற்கூறிய அசல் வழக்குகளில் சில இடைக்கால உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

6. தனது சகோதரரான குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1, அக்ரமுதீன் ஹசன், தங்களது தந்தைவழிப் பாட்டியான கைருன்னிசா பேகம் சாஹேபாவால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் ஒரு போலி உருது உயிலை உருவாக்கியுள்ளார் என்றும்; அந்த உயில், தங்களது பெற்றோரான அப்சலுதீன் ஹசன் மற்றும் லியாகத்துன்னிசா பேகம் ஆகியோரது வாழ்நாள் அனுபவத்திற்காகவும், அதன் பிறகு மீதமுள்ள சொத்துரிமை குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–க்குச் சேரும் வகையிலும் உள்ளதாகப் புகார்தாரர் தனது புகாரில் தெரிவித்துள்ளார். மேற்கூறிய உயில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அது 02.04.1950 அன்று எழுதப்பட்டதாகக் கூறப்படுவதாகவும் புகார்தாரர் குறிப்பிட்டுள்ளார். மேலும், குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1, உறுதிப்படுத்தும் ஆவணம் (ஹிபா பில் முஷா) என்ற பெயரில் 08.03.1990 தேதியிட்ட மற்றொரு போலியான மற்றும் புனையப்பட்ட ஆவணத்தை உருவாக்கியுள்ளார் என்றும்; அதன் வாயிலாக 29.08.1989 அன்று அந்தச் சொத்து குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–க்கு வாய்மொழியாகத் தானம் வழங்கப்பட்டதாகவும், அதன் நேரடி அனுபவ சுவாதீனம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

7. மேலும், குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1, அந்த வாய்மொழி உயில் மற்றும் உறுதிப்படுத்தும் ஆவணம் ஆகியவற்றின் அடிப்படையில் தன்னை அந்த இடத்தின் உரிமையாளர் எனக் காட்டிக்கொண்டு, 01.12.2008 அன்று ஆவண எண் 3107/2008 கொண்ட ஒரு பதிவு செய்யப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தை உருவாக்கியுள்ளார் என்றும்; அதன்

மூலம் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–ஐ, அந்த நிலத்தை குற்றம் சாட்டப்பட்டவர் எண் 5–ஆன ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (HPCL) நிறுவனத்திற்கு உள்–குத்தகைக்கு விட அனுமதித்துள்ளார் என்றும் புகார்தாரர் தெரிவித்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டவர் எண் 6 மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 9 ஆகியோர் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 5–ஆன HPCL நிறுவனத்தின் ஊழியர்கள்/அதிகாரிகள் ஆவர்; அதேசமயம், குற்றம் சாட்டப்பட்டவர்கள் 7 மற்றும் 8 ஆகியோர் சான்றுக் கையொப்பமிட்ட சாட்சிகள் ஆவர். அந்தப் புகாரின் அடிப்படையில், தலைமை மாநகர குற்றவியல் நடுவர் 24.11.2010 அன்று முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய உத்தரவிட்டார்.

8. உயர் நீதிமன்றத்தில் பல்வேறு குற்றவியல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது. குற்றவியல் மனு எண் 6047/2013, குற்றம் சாட்டப்பட்டவர் எண் 7–ஆன காஜா மொய்தீன் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 8–ஆன ஜி. வி. பிரசாத் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டது. குற்றவியல் மனு எண் 6064/2013, குற்றம் சாட்டப்பட்டவர் எண் 3–ஆன ஆபித் ரசூல் கானால் தாக்கல் செய்யப்பட்டது. குற்றவியல் மனு எண் 8743/2013, குற்றம் சாட்டப்பட்டவர் எண் 5–ஆன HPCL நிறுவனம் மற்றும் அதன் அதிகாரிகளான குற்றம் சாட்டப்பட்டவர் எண் 6, எஸ்.கே. சூரி மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 9, ஆர். உமாபதி ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டது. எதிர்த்துரைக்கப்பட்ட உத்தரவின் மூலம், குற்றம்

சாட்டப்பட்டவர்கள் 3 மற்றும் 4–ஐத் தவிர மற்ற அனைத்து மனுதாரர்களின் குற்றவியல் மனுக்களையும் உயர் நீதிமன்றம் அனுமதித்தது.

9. தனது மனு தள்ளுபடி செய்யப்பட்டதால் அதிருப்தி அடைந்த குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4, மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் 5, 6, 7, 8 மற்றும் 9 ஆகியோரின் மனுக்கள் அனுமதிக்கப்பட்ட உத்தரவினால் அதிருப்தி அடைந்த அசல் புகார்தாரர் ஆகிய இருதரப்பினரும் இந்த நீதிமன்றத்தை அணுகியுள்ளனர்.

10. மேல்முறையீட்டாளர் எம். ஸ்ரீகாந்த் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் திரு. D. ராம கிருஷ்ண ரெட்டி மற்றும் புகார்தாரர் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஷகீல் அகமது சையத் ஆகியோரின் வாதங்களை நாங்கள் கேட்டறிந்தோம். அசல் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 5–ஆன HPCL நிறுவனம் மற்றும் அதன் அதிகாரிகள்/ஊழியர்களான குற்றம் சாட்டப்பட்டவர்கள் 6 மற்றும் 9 ஆகியோரின் சார்பாக ஆஜரான கற்றறிந்த கூடுதல் தலைமைச் சட்ட முகவர் திரு. K. M. நடராஜ் அவர்களின் வாதங்களையும் நாங்கள் கேட்டறிந்தோம்.

11. அசல் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–ன் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், சம்பந்தப்பட்ட சொத்தின் முழுமையான உரிமையாளர் தான்தான் என்று காட்டிக்கொண்ட குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–ஆல், குற்றம் சாட்டப்பட்ட எண் 4–ன் பெயரில்

ஒரு குத்தகை பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்பது மட்டுமே புகாரில் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள ஒரே குற்றச்சாட்டாகும்; ஆனால், உண்மையில் அந்தச் சொத்தானது புகார்தாரர், அவரது மூன்று சகோதரிகள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 ஆகியோருக்குச் சொந்தமானதாகும் என்று சமர்ப்பித்தார். மேலும், அந்தச் சொத்து குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–க்குச் சொந்தமானது என்று காட்டுவதற்காகச் செய்யப்பட்ட ஆவணப் புனைவு தொடர்பான அனைத்துக் குற்றச்சாட்டுகளும் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–க்கு எதிராகவே உள்ளன என்றும் சமர்ப்பிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர் எண் 5–ஆன HPCL நிறுவனம் பெட்ரோல் பங்க் அமைப்பதற்காக வெளியிட்ட விளம்பரத்தின் அடிப்படையில், குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4 விண்ணப்பித்ததாகவும், அந்தப் போட்டியில் வெற்றி பெற்ற பிறகு சம்பந்தப்பட்ட நிலத்தை குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–யிடமிருந்து குத்தகைக்கு பெற்றதாகவும் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த விற்பனை நிலையத்தை ஒதுக்குவதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி, அவர் அந்த நிலத்தை நீண்டகால குத்தகைக்கு எடுக்க வேண்டும் என்றும், பின்னர் அதனை குற்றம் சாட்டப்பட்டவர் எண் 5–ஆன HPCL நிறுவனத்திற்கு உள்–குத்தகைக்கு விட வேண்டும் என்றும் அவர் சமர்ப்பித்தார்.

அந்தப் புகாரை அதன் முக மதிப்பிலேயே எடுத்துக்கொண்டாலும் கூட, குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–க்கு சொத்துரிமையை வழங்கிய ஆவணங்களைப் புனைவதில், குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கு

ஏதேனும் பங்கு இருந்ததைக் காட்டும் விதமான கூற்றுகள் ஏதும் அதில் இல்லை என்று சமர்ப்பிக்கப்பட்டது. புகார்தாரர், **குற்றம் சாட்டப்பட்டவர்** எண் 1 மற்றும் அவர்களது சகோதரிகள், அதேபோல இதர தரப்பினரிடையே பல்வேறு உரிமையியல் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று மேலும் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த வழக்குகளுக்கும் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

12. உண்மையைச் சொல்லப்போனால், குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–ன் வழக்கினை, குற்றம் சாட்டப்பட்டவர்கள் 5, 6, 7, 8 மற்றும் 9 ஆகியோருக்கு எதிரான வழக்கிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாது என்று மேலும் சமர்ப்பிக்கப்பட்டது. அந்தப் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான வழக்கை ரத்து செய்யும் போது, உயர் நீதிமன்றத்தின் கற்றறிந்த நீதிபதி எந்தத் தர்க்கத்தைப் பயன்படுத்தினாரோ, அதே தர்க்கத்தைப் பயன்படுத்தி தற்போதைய குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கு எதிரான வழக்கையும் ரத்து செய்திருக்க வேண்டும் என்று சமர்ப்பிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளரான இந்த குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கு எதிராகக் குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடர்வது என்பது, சட்ட நடைமுறையைத் துஷ்பிரயோகம் செய்வதைத் தவிர வேறொன்றுமில்லை என்று சமர்ப்பிக்கப்பட்டது.

13. இதற்கு நேர்மாறாக, தனிநபர் புகார்தாரர் சார்பாக ஆஜரான கௌரவமிகு வழக்கறிஞர் திரு. ஷகீல் அகமது சையத், குற்றம்

சாட்டப்பட்டவர் எண் 4–ன் மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது சரியானதுதான் என்று சமர்ப்பித்தார். குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–ன் உரிமைக் கோரலானது புனையப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலானது என்பது மிக நன்றாகத் தெரிந்திருந்தும், புகார்தாரருக்கு அந்தச் சொத்தின் மூலம் கிடைக்க வேண்டிய பலன்களைத் தடுக்கும் நோக்கில், குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4 அந்த நிலத்தைத் தனது பெயருக்கு குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–யிடமிருந்து குத்தகைக்கு எடுத்துக்கொண்டார் என்று சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் 5, 6, 7, 8 மற்றும் 9 ஆகியோரின் மனுக்களை அனுமதித்ததன் மூலம் உயர் நீதிமன்றம் தவறிழைத்துவிட்டது என்றும், எனவே, அவர்கள் குறித்த அளவில் குற்றவியல் நடவடிக்கைகளை ரத்து செய்த அந்த உத்தரவின் பகுதி நீக்கறவு செய்யப்பட வேண்டும் என்றும் அவர் சமர்ப்பித்தார்.

14. கற்றறிந்த கூடுதல் தலைமைச் சட்ட முகவர் திரு. K.M. நடராஜ் தனது வாதத்தில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் 5, 6 மற்றும் 9 ஆகியோர் இந்த குற்றவியல் வழக்கில் தேவையில்லாமல் சேர்க்கப்பட்டுள்ளார் என்று சமர்ப்பித்தார். குற்றம் சாட்டப்பட்டவர் எண் 5–ஆன HPCL நிறுவனம் ஒரு பொதுத்துறை நிறுவனம் என்றும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் 6 மற்றும் 9 ஆகியோர் அதன் அதிகாரிகள் என்றும் சமர்ப்பிக்கப்பட்டது. அவர்களுக்கு எதிராக குற்றத்தை நிரூபிக்கப் போதுமான ஆதாரங்கள் ஏதுமில்லை என்ற முடிவுக்கு உயர் நீதிமன்றம் சரியாக வந்துள்ளதாகவும், அதன்படியே அவர்கள் குறித்த அளவில்

குற்றவியல் நடவடிக்கைகளை ரத்து செய்துள்ளதாகவும் சமர்ப்பிக்கப்பட்டது.

15. இந்த நீதிமன்றம், *ஹரியானா மாநிலம் மற்றும் பலர் எதிர் பஜன் லால் மற்றும் பலர்* (1992 துணை (1) எஸ்.சி.சி 335) என்ற வழக்கில், தனது முந்தைய அனைத்துத் தீர்ப்புகளையும் பரிசீலித்த பிறகு, குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் பிரிவு 482-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி வழக்குகளை ரத்து செய்யும்போது, உயர் நீதிமன்றங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய சில கோட்பாடுகளை வகுத்துள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள *பஜன் லால்* வழக்கில் இந்த நீதிமன்றம் வழங்கிய பின்வரும் கருத்துக்களைக் குறிப்பிடுவது இங்கே பொருத்தமானதாக இருக்கும்:

> "102. அத்தியாயம் XIV-ன் கீழ் உள்ள சட்டத்தின் பல்வேறு தொடர்புடைய விதிகள் மற்றும் அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 226-ன் கீழ் உள்ள அசாதாரண அதிகாரம் அல்லது சட்டத்தின் பிரிவு 482-ன் கீழ் உள்ள உள்ளார்ந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக இந்த நீதிமன்றம் தனது தொடர்ச்சியான தீர்ப்புகளில் வழங்கியுள்ள (மேலே நாம் குறிப்பிட்டுள்ள) சட்டக் கோட்பாடுகளின் பின்னணியில், நீதிமன்ற நடைமுறைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுக்கவோ அல்லது நீதியை நிலைநாட்டவோ இத்தகைய அதிகாரங்களைப் பயன்படுத்தக்கூடிய சில வகை வழக்குகளை உதாரணமாக இங்கே வழங்குகிறோம்; இருப்பினும், இத்தகைய அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டிய

எண்ணற்ற வகை வழக்குகளுக்கான துல்லியமான, தெளிவான, நெகிழ்வற்ற வழிகாட்டுதல்கள் அல்லது கடினமான சூத்திரங்கள் மற்றும் முழுமையான பட்டியலை வழங்குவது சாத்தியமற்றது.

(1) முதல் தகவல் அறிக்கையிலோ அல்லது புகாரிலோ கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், அவற்றின் முக மதிப்பிலேயே எடுத்துக் கொள்ளப்பட்டு, அவை முழுமையாக உண்மையானவை என்று ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் கூட, அவை ஒரு குற்றத்திற்கான எந்தவொரு முதற்கட்ட முகாந்திரத்தையும் உருவாக்கவில்லை என்றாலோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக எந்தவொரு வழக்கையும் நிரூபிக்கவில்லை என்றாலோ

(2) முதல் தகவல் அறிக்கையில் உள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் அந்த முதன் தகவல் அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள இதர ஆவணங்கள் ஏதேனும் இருப்பின், ஒரு புலன்கொள் குற்றத்தை வெளிப்படுத்தவில்லை எனில், சட்டத்தின் பிரிவு 155(2)-ன் வரம்பிற்கு உட்பட்டு ஒரு குற்றவியல் நடுவரின் உத்தரவின் கீழ் அன்றி, பிரிவு 156(1)-ன் கீழ் காவல்துறை அதிகாரிகள் ஒரு புலனாய்வை மேற்கொள்வதை நியாயப்படுத்தும் வகையில் அந்தப் புகார் அமையவில்லை என்றால்

(3) முதல் தகவல் அறிக்கையிலோ அல்லது புகாரிலோ கூறப்பட்டுள்ள மறுக்கப்படாத குற்றச்சாட்டுகள் மற்றும் அவற்றுக்கு

ஆதரவாக சேகரிக்கப்பட்ட ஆதாரங்கள், ஒரு குற்றம் நடைபெற்றதை வெளிப்படுத்தவில்லை என்றாலோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக எந்தவொரு வழக்கையும் உறுதி செய்யவில்லை என்றாலோ

(4) முதல் தகவல் அறிக்கையில் உள்ள குற்றச்சாட்டுகள் ஒரு புலன்கொள் குற்றத்தை வெளிப்படுத்தாமல், ஒரு புலன்கொள்ளா குற்றத்தை மட்டுமே வெளிப்படுத்தும் பட்சத்தில், சட்டத்தின் பிரிவு 155(2)–ன் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு ஒரு குற்றவியல் நடுவரின் உத்தரவு இன்றி காவல்துறை அதிகாரி எவ்வித புலனாய்வையும் மேற்கொள்ள அனுமதி இல்லை.

(5) முதல் தகவல் அறிக்கையிலோ அல்லது புகாரிலோ கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மிகவும் அபத்தமாகவும் மற்றும் இயல்பிலேயே நம்ப முடியாத தன்மையிலும் இருந்து, அதன் அடிப்படையில் எந்தவொரு விவேகமுள்ள மனிதரும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராகத் தொடர் நடவடிக்கை எடுப்பதற்குப் போதுமான முகாந்திரம் இருப்பதாக ஒரு நியாயமான முடிவுக்கு வர முடியாது என்ற நிலையில்.

(6) குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் விதிகளிலோ அல்லது எந்தச் சட்டத்தின் கீழ் கிரிமினல் நடவடிக்கை தொடங்கப்பட்டதோ அந்தச் சட்டத்திலோ, ஒரு வழக்கை மேற்கொள்வதற்கோ அல்லது தொடர்வதற்கோ வெளிப்படையான

சட்டத் தடை விதிக்கப்பட்டிருக்கும் சூழலில் மற்றும்/அல்லது பாதிக்கப்பட்ட தரப்பினரின் குறைகளுக்குத் தீர்வு காண அந்தச் சட்டத்திலேயே ஒரு பயனுள்ள மாற்றுத் தீர்வு வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில்

(7) ஒரு குற்றவியல் நடவடிக்கை வெளிப்படையாகவே தீய எண்ணத்துடனும் மற்றும்/அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீது பழிவாங்கும் நோக்கோடும், தனிப்பட்ட பகை காரணமாக அவரைத் துன்புறுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்துடனும் தொடங்கப்பட்டிருந்தால்

16. இவ்வாறு, முதல் தகவல் அறிக்கையிலோ அல்லது புகாரிலோ கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், அவற்றின் முக மதிப்பிலேயே எடுத்துக்கொள்ளப்பட்டு முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் கூட, அவை குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக முதற்கட்ட முகாந்திரத்தை உருவாக்கவில்லை என்றால், அந்த நடவடிக்கைகளை ரத்து செய்வது நியாயமானது என்று இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேலும், முதல் தகவல் அறிக்கையில் உள்ள மறுக்கப்படாத குற்றச்சாட்டுகள் மற்றும் அவற்றுக்கு ஆதரவாகச் சேகரிக்கப்பட்ட ஆதாரங்கள் எந்தவொரு குற்றத்தையும் வெளிப்படுத்தவில்லை என்றாலோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான வழக்கை உறுதிப்படுத்தவில்லை என்றாலோ, அந்த வழக்கை ரத்து செய்வதில் நீதிமன்றம் நியாயமானதே என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

17. புகாரில் உள்ள உண்மைகளின் உண்மைத்தன்மை அல்லது அதன் பிற அம்சங்களை ஆராயாமல், புகார்தாரர் முன்வைத்துள்ள வழக்கினை அதன் முக மதிப்பிலேயே நாம் கருத்தில் கொள்வோம். அந்தச் சொத்து முதலில் தனது பாட்டிக்குச் சொந்தமானது என்பது புகார்தாரரின் வழக்காகும். அவரது மரணத்திற்குப் பிறகு, அச்சொத்து அவரது தந்தையான அஃப்சாலுத்தீன் ஹசனிடம் வந்து சேர்ந்தது; அவர் 28.05.1996 அன்று காலமான பிறகு, அச்சொத்து குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 மற்றும் அவரது மூன்று சகோதரிகளான கரிமா சித்திகா, சலேஹா அஸ்மதுன்னிசா மற்றும் சாதிகா கைருன்னிசா ஆகியோருக்கு வந்தது. அவர்களது தந்தை தி/ள் பஞ்சாரா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் ஒரு மேம்பாட்டு ஒப்பந்தம் செய்திருந்தார், இருப்பினும், அந்த ஒப்பந்தம் அவர் வாழ்ந்த காலத்திலேயே ரத்து செய்யப்பட்டது. 28.05.1996 அன்று தந்தை காலமான பிறகு, குற்றம் சாட்டப்பட்டவர் எண் 3 அந்தச் சொத்துக்குள் அத்துமீறி நுழைய முயன்றார், அது குறித்து அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் ஒரு குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த தி/ள் பஞ்சாரா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிடெட் நிறுவனம், தனக்குள்ள உரிமைகளை தி/ள். என்.ஆர்.ஐ ஹவுசிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு மாற்றிக் கொடுத்ததாக ஒரு ஆவணத்தைச் செயல்படுத்தியிருந்தது; அந்த என்.ஆர்.ஐ ஹவுசிங் நிறுவனத்தின் மேலாண் இயக்குநராக குற்றம் சாட்டப்பட்டவர் எண் 3–ஆன ஆபித் ரசூல் கான் இருந்தார். இதே நடவடிக்கை தொடர்பாக, புகார்தாரரின் கோரிக்கையின் பேரில் குற்ற எண். 177/1996 பதிவு

செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய அந்தப் பரிவர்த்தனை தொடர்பாக, ஏற்கனவே இரண்டு அசல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன, அதில் ஒன்று புகார்தாரராலும், மற்றொன்று அவரது சகோதரிகளாலும் தாக்கல் செய்யப்பட்டது.

18. மேலும், புகார்தாரரின் வழக்கு, குற்றம் சாட்டப்பட்ட எண் 1 உருது மொழியில் ஒரு உயிலை உருவாக்கி, அவரது பாட்டி தனது பெற்றோர்களான அப்சலுதீன் ஹசன் மற்றும் லியாகதுன்னிசா பேகம் ஆகியோருக்கு வாழ்நாள் முழுவதும் சொத்துக்களை உயில்வழியாக அளித்ததாகவும், எஞ்சியிருக்கும் உரிமைகளை குற்றம் சாட்டப்பட்ட 1வது நபருக்கு சேர்ந்தடைய வேண்டுமென்று புகாரில் கூறியிருந்தார். மேற்படி உயில் நிஜாமத் ஜங்கின் நீதிசாரா முத்திரைத்தாளில் உருவாக்கப்பட்டது மற்றும் 02.04.1950 அன்று நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. புகார்தாரரின் கூற்றுப்படி, அவரது சகோதரரான குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1, வாய்மொழியாக வழங்கப்பட்ட தானத்தை உறுதிப்படுத்தும் வகையிலும் மற்றும் சொத்தின் நேரடி உடமையை ஒப்படைப்பதைக் குறிப்பிடும் வகையிலும், 08.03.1990 தேதியிட்ட உறுதிப்படுத்தல் ஆவணம் என்ற பெயரில் மற்றொரு போலி மற்றும் புனையப்பட்ட ஆவணத்தை உருவாக்கியுள்ளார். அந்தப் புனையப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 அந்தச் சொத்தின் முழுமையான உரிமையாளர் என்று தன்னைக் காட்டிக்கொண்டு, 01.12.2008 அன்று குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கு (இந்த மேல்முறையீட்டாளர்களில் ஒருவர்) சாதகமாக ஒரு குத்தகை

பத்திரத்தை நிறைவேற்றினார் என்பது புகார்தாரரின் வழக்காகும். அதன் பிறகு, இரண்டு மாத காலத்திற்குள், அதாவது 30.01.2009 அன்று, குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4, குற்றம் சாட்டப்பட்டவர்கள் 6 மற்றும் 9 மூலமாக குற்றம் சாட்டப்பட்டவர் எண் 5–ஆன HPCL நிறுவனத்திற்கு சாதகமாக ஒரு உள்–குத்தகை ஒப்பந்தத்தை நிறைவேற்றினார் என்றும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் 7 மற்றும் 8 ஆகியோர் அதற்கு சான்றுக் கையொப்ப சாட்சிகள் என்பதும் புகார்தாரரின் மேலதிக வழக்காகும். புகார்தாரரின் வழக்கு இதுவே ஆகும்.

19. எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 (புகார்தாரர்) தாக்கல் செய்துள்ள புகாரானது 26 பக்கங்களையும் 26 பத்திகளையும் கொண்டுள்ளது. மேலே ஏற்கனவே விவாதிக்கப்பட்டபடி, இப்புகார் புகார்தாரர், அவரது சகோதரிகள் மற்றும் அவரது சகோதரரான குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 ஆகியோருக்கு இடையே வாரிசுரிமை அடிப்படையில் நிலவி வரும் ஒரு சர்ச்சைக்குரிய சொத்து உரிமைக் கோரலை வெளிப்படுத்துகிறது. இந்தப் புகாரைப் பரிசீலிக்கும்போது, சொத்தின் பரப்பளவு, அது புகார்தாரரின் பெற்றோருக்கு வந்து சேர்ந்த விதம் மற்றும் தனது உடன்பிறந்தவர்களுடன் தனக்குள்ள போட்டித் தன்மையுள்ள உரிமை ஆகியவற்றுடன் புகார்தாரர் முரண்படுவதையும் வெளிப்படுத்துகிறது. வாரிசுரிமை மூலம் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 மட்டுமே அந்தச் சொத்தின் ஒரே பயனாளியல்ல என்பதும், அந்தச் சொத்து புகார்தாரர் மற்றும் அவரது சகோதரிகளுக்கும் வந்து சேர்ந்தது என்பதும் தற்போதைய மேல்முறையீட்டாளரான குற்றம் சாட்டப்பட்டவர்

எண் 4–க்கு முழுமையாகத் தெரியும் என்று இந்தப் புகாரில் ஒரு சிறு குறிப்பு கூட இல்லை. மேலும், இது தெரிந்திருந்தும் அவர் ஒரு பொய்யான மற்றும் புனையப்பட்ட உயிலை உருவாக்கி, குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–உடன் கூட்டுச் சதியில் ஈடுபட்டு இந்தக் குத்தகை ஒப்பந்தத்தில் ஈடுபட்டார் என்பதைக் காட்டவும் எதுவுமில்லை. புகாரில் சதியைப் பற்றியக் குறிப்பு இருந்தாலும், அத்தகைய சதி எந்த முறையில் நடைபெற்றது என்பது குறித்த ஒரு சிறு பரிந்துரை கூட அதில் இல்லை.

20. அந்தப் புகாரைப் பரிசீலித்ததில், புகார்தாரரின் தந்தை மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 3 ஆகியோரே ஒரு மேம்பாட்டு ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதும், அது பின்னர் அவரது வாழ்நாளிலேயே ரத்து செய்யப்பட்டது என்பதும் தெரியவருகிறது. மேலும், தற்போது சர்ச்சைக்குள்ளாகியுள்ள இந்தக் குத்தகை ஒப்பந்தம் மேல்முறையீட்டாளருக்கு சாதகமாக நிறைவேற்றப்பட்ட பின்னரே, புகார்தாரர் இந்தப் பிரச்சனைகள் அனைத்தையும் எழுப்பியுள்ளார் என்பதும் வெளிப்படுகிறது. எழுப்பப்பட்டுள்ள இந்தப் பிரச்சனைகள், சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு இடையேயான வாரிசுரிமை தொடர்பான ஒரு உரிமையியல் சர்ச்சையையே பிரதிபலிக்கின்றன என்பது எங்களது தீர்க்கமான கருத்தாகும். ஒரு உயில் மற்றும் உறுதிப்படுத்தல் ஆவணத்தின் கீழான வாரிசுரிமை குறித்த ஒரு தகராறை, ஒரு குற்றவியல் நடவடிக்கையில் எவ்வாறு தீர்மானிக்க முடியும் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதனை ஒரு பொருத்தமான

உரிமையியல் நடவடிக்கையின் மூலம் மட்டுமே செய்ய முடியும் என்று நாங்கள் காண்கிறோம். அதுமட்டுமன்றி, புகார்தாரர் உட்பட பல்வேறு தரப்பினரால் இது தொடர்பான உரிமையியல் நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. அந்த நடவடிக்கைகள் பின்வருமாறு:

(i) மாண்புமிகு XI கூடுதல் உரிமையியல் நீதிபதி (ஏசிஜெ), நகர உரிமை வழக்கு நீதிமன்றம், ஹைதராபாத் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண். 239/2004.

(ii) மாண்புமிகு XI ஏசிஜெ, நகர உரிமை வழக்கு நீதிமன்றம், ஹைதராபாத் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண். 337/2002.

(iii) மாண்புமிகு XI ஏசிஜெ, நகர உரிமை வழக்கு நீதிமன்றம், ஹைதராபாத் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண். 58/2001.

(iv) மாண்புமிகு XI ஏசிஜெ, நகர உரிமை வழக்கு நீதிமன்றம், ஹைதராபாத் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண். 277/2000.

(v) மாண்புமிகு XI ஏசிஜெ, நகர உரிமை வழக்கு நீதிமன்றம், ஹைதராபாத் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண். 506/2001.

(vi) நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண். 685/2010.

21. புகார்தாரர் தனது புகாரில், குற்றம் சாட்டப்பட்டவர் எண் 3–க்கு எதிராக நிலுவையில் உள்ள அசல் வழக்கு (O.S.) எண். 1989/1996 மற்றும் தி/ள் பஞ்சாரா கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு எதிராக நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண். 1403/1999 ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தாலும், பிற சட்ட நடவடிக்கைகள் குறித்த எந்தவொரு குறிப்பும் அதில் இடம்பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தற்போதைய மேல்முறையீட்டாளரான குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4, 2001–ஆம் ஆண்டின் அசல் வழக்கு எண். 506–ல் ஒரு பிரதிவாதி தரப்பினராக 30.10.2009 அன்றுதான் இணைக்கப்பட்டார்.

22. புகார்தாரர் தனது சகோதரரான குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 மற்றும் தனது மூன்று சகோதரிகளுக்கு எதிராக, பாகப்பிரிவினை மற்றும் தனி உடமை கோரி ஏற்கனவே தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 239/2004 தற்போது நிலுவையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவ்வாறிருக்கையில், புகாரில் மோசடியானது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும், அந்த உரிமையியல் வழக்கிலேயே பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். குற்றவியல் நடவடிக்கைக்கு நேர்மாறாக, உரிமையியல் நடவடிக்கையில் முரணான முடிவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பை நிராகரிக்க முடியாது. சர்ச்சைக்குரிய அந்த நிலத்தில் கட்டுமானப் பணிகளைத் தடுப்பதற்காக புகார்தாரர் நீதிப்பேராணை மனு எண்கள் 23017/2009 மற்றும் 23672/2009 ஆகியவற்றைத் தாக்கல் செய்திருந்த போதிலும், அவை

28.10.2009 அன்று தள்ளுபடி செய்யப்பட்டன. இருப்பினும், இது தொடர்பான எந்தவொரு குறிப்பும் புகாரில் இடம்பெறவில்லை. *சர்தூல் சிங் எதிர் நசீப் கவுர்* [(1987)துணை எஸ்.சி.சி 146] என்ற வழக்கில் இந்த நீதிமன்றம் பின்வருமாறு கருத்துரைத்தது:

> "2. தரப்பினரிடையே ஒரு உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது; அதில், எவ்வித உயிலும் நிறைவேற்றப்படவில்லை என்பது எதிர்மேல்முறையீட்டாளரின் வாதமாகவும், அதேசமயம் உயில் ஆவணத்தை எழுதியவர் ஒரு உயிலை நிறைவேற்றியுள்ளார் என்பது மேல்முறையீட்டாளர்களின் வாதமாகவும் உள்ளது. ராம்பூர் மாவட்ட நீதிபதி முன்னிலையில், அந்த உயிலுக்கான மெய்ப்பிப்புச் சான்றிதழ் கோரும் வழக்கும் நிலுவையில் உள்ளது. எனவே, அந்த உயிலின் செல்லுபடித்தன்மை குறித்த கேள்வியை உரிமையியல் நீதிமன்றம் தனது அதிகார வரம்பிற்குள் எடுத்துக்கொண்டு விசாரித்து வருகிறது. மேற்கூறிய இரண்டு சிவில் வழக்குகளிலும் இந்த விவகாரமானது நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது. இத்தகையச் சூழலில், அந்த உயில் ஒரு புனையப்பட்ட ஆவணம் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் ஒரு குற்றவியல் வழக்கைத் தொடங்க எதிர்மேல்முறையீட்டாளருக்கு அனுமதி அளிக்க முடியாது. அந்தக் கேள்வியானது, சட்டத்தின்படி சாட்சியங்களைப் பதிவு செய்தும் தரப்பினரின் வாதங்களைக் கேட்டறிந்தும் உரிமையியல் நீதிமன்றத்தாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும். அந்த

உயிலின் செல்லுபடித்தன்மை ஒரு உரிமையியல் நீதிமன்றத்தின் முன் சோதிக்கப்பட்டு வரும் நிலையில், இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர்கள் மீது வழக்குத் தொடர எதிர்மேல்முறையீட்டாளரை அனுமதிப்பது முறையானதாக இருக்காது. எனவே, நாங்கள் இந்த மேல்முறையீட்டை அனுமதித்து, உயர் நீதிமன்றத்தின் உத்தரவைத் நீக்கறவு செய்கிறோம், மேலும், சண்டிகர் முதலாவது வகுப்பு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள *திருமதி நசீப் கவுர் எதிர் சர்தூல் சிங்* என்ற குற்றவியல் வழக்கின் நடவடிக்கைகளை ரத்து செய்கிறோம். ஒருவேளை அந்த உயில் போலியானது என்ற முடிவுக்கு உரிமையியல் நீதிமன்றம் வரும் பட்சத்தில், எதிர்காலத்தில் உரிய சட்ட நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு இந்த உத்தரவு தடையாக இருக்காது. சர்ச்சைக்குரிய அந்த உயிலின் உண்மைத்தன்மை அல்லது அதன் பிற தன்மைகள் குறித்து எவ்விதக் கருத்தையும் தெரிவிப்பதிலிருந்து நாங்கள் நிச்சயமாகத் தவிர்ந்து கொள்கிறோம்; ஏனெனில் அதற்கான அவசியம் தற்போது எழவில்லை என்பதோடு, அந்தக் கேள்வி கீழமை நீதிமன்றங்களின் முன் இன்னும் முடிவு செய்யப்படாமல் உள்ளது."

23. மேலும் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், புகார்தாரர் மற்றும் அவரது சகோதரிகள் 20.03.2015 அன்று முகமது காலித் ஷெரீப் என்பவருக்கு ஆதரவாக விற்பனை ஒப்பந்தம் மற்றும் ரத்து செய்ய முடியாத குறிப்பிட்ட பொது அதிகாரப் பத்திரம் ஆகியவற்றை

நிறைவேற்றிக் கொடுத்துள்ளனர். பெட்ரோல் பங்க் அமைத்தல் மற்றும் அதற்குரிய தடையில்லாச் சான்றிதழ் வழங்குதல் போன்றவை தொடர்பாகப் பல்வேறு வழக்குகள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 24.11.2010 அன்று, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 156(3)-ன் கீழ், ஒரு முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து புலனாய்வு மேற்கொள்வதற்காக இந்தப் புகார் காவல்துறைக்கு அனுப்பப்பட்டது. 30.08.2017 தேதியிட்ட தனது இறுதி அறிக்கையில், புலனாய்வின் போது எந்தவொரு சதியையும் நிரூபிப்பதற்கான எவ்வித ஆதாரங்களும் கிடைக்கவில்லை என்று காவல்துறை கருத்துத் தெரிவித்துள்ளது.

24. கற்றறிந்த நீதிபதியே தனது தீர்ப்பின் 8-வது பத்தியில், சர்ச்சைக்குரிய ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் போலியானவை என்றோ அல்லது ஏமாற்றும் நோக்கில் யாரேனும் ஒருவரைப் போல ஆள்மாறாட்டம் செய்துள்ளனர் என்றோ எவருடைய வாதமும் இல்லை என்று அவதானித்த பிறகு, பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"8.... இது தொடர்பான குற்றச்சாட்டுகளின் சுருக்கம் என்னவென்றால், குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 அந்தச் சொத்துக்களின் முழுமையான உரிமையாளர் அல்ல; மாறாக அவர் உண்மைப் புகார்தாரர் மற்றும் அவரது பிற சகோதரிகளுடன் சேர்ந்து அந்தச் சொத்தில் ஒரு இணை உரிமையாளர் அல்லது பங்குதாரர் மட்டுமே ஆவார்; அவ்வாறிருக்கையில், உயில் மற்றும் உறுதிப்படுத்தல் ஆவணம் எனப்படும் புனையப்பட்ட மற்றும் போலி ஆவணங்களை

உண்மையானவை போலப் பயன்படுத்தி, ஏமாற்றும் நோக்கில் தன்னை உரிமையாளர் என்று அவர் தவறாகக் கோரினார் என்பதாகும். அந்த உயில் என்று சொல்லப்படுவது 1950–ஆம் ஆண்டைச் சேர்ந்தது, உறுதிப்படுத்தல் ஆவணம் என்று சொல்லப்படுவது 1989–1990–ஆம் ஆண்டைச் சேர்ந்தது மற்றும் அதற்கு முந்தைய வாய்மொழித் தானம் 1966–ஆம் ஆண்டைச் சேர்ந்தது என்று கூறப்படுகிறது....."

25. மேற்கூறியவற்றை அவதானித்த பிறகும், குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கு எதிரான நடவடிக்கைகளை ரத்து செய்யக் கற்றறிந்த நீதிபதி எவ்வாறு மறுத்தார் என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதுமட்டுமன்றி, தனது அதே அவதானிப்புகளின் அடிப்படையில், புலனாய்விற்காகக் குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்யக் காவல்துறையை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றும் அந்த நீதிபதியே குறிப்பிட்டிருந்தார். ஆவணங்களைப் புனைந்தது மற்றும் போலியாக உருவாக்கியது தொடர்பான அனைத்துக் குற்றச்சாட்டுகளும், அந்தப் போலி ஆவணங்களின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1 குத்தகை ஒப்பந்தத்தைச் செயல்படுத்தியது தொடர்பான குற்றச்சாட்டுகளும் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 1–க்கு எதிராக மட்டுமே உள்ளன என்பதைக் கண்டறிந்த பிறகு, கற்றறிந்த நீதிபதி குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கு எதிராகவும் அந்த வழக்கை ரத்து செய்யத் தனது அதிகார வரம்பைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்பது எங்களது தீர்க்கமான கருத்தாகும். எந்த அளவுகோல்களைப் பயன்படுத்தி

மற்ற குற்றம் சாட்டப்பட்டவர்களின் மனுக்கள் அனுமதிக்கப்பட்டவோ, அதே அளவுகோல்களைக் கற்றறிந்த நீதிபதி தற்போதைய குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கும் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று நாங்கள் காண்கிறோம். எந்த அளவுகோல்களைப் பயன்படுத்தி மற்ற குற்றம் சாட்டப்பட்டவர்களின் மனுக்கள் அனுமதிக்கப்பட்டவோ, அதே அளவுகோல்களைக் கற்றறிந்த நீதிபதி தற்போதைய குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கும் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று நாங்கள் காண்கிறோம்.

26. அசல் புகார்தாரர் தாக்கல் செய்த சிறப்பு அனுமதி மனுக்களிலிருந்து உருவான குற்றவியல் மேல்முறையீடுகளைப் பொறுத்தவரை, அந்த மேல்முறையீடுகளில் எவ்வித முகாந்திரமும் இல்லை என்று நாங்கள் திட்டவட்டமாகக் கருதுகிறோம். குற்றம் சாட்டப்பட்டவர் எண் 5–ஆன HPCL நிறுவனம் மற்றும் அதன் அதிகாரிகளான குற்றம் சாட்டப்பட்டவர்கள் 6 மற்றும் 9 ஆகியோருக்கு எதிராகவும், சான்றுக் கையொப்ப சாட்சிகள் என்ற காரணத்திற்காகவே வழக்கில் சேர்க்கப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்கள் 7 மற்றும் 8 ஆகியோருக்கு எதிராகவும் தொடர் நடவடிக்கை எடுக்க எந்த ஆதாரமும் இல்லை என்று கற்றறிந்த தனி நீதிபதி சரியாகவே கண்டறிந்துள்ளார். கற்றறிந்த தனி நீதிபதி, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 482–ன் கீழ் தனக்குள்ள அதிகார வரம்பைச் சரியாகவே பயன்படுத்தியுள்ளார்.

27. அசல் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–ஐப் பொறுத்தவரை, இவரது வழக்கினை இந்த நீதிமன்றம் பஜன் லால் வழக்கில் வகுத்துள்ள (1) மற்றும் (3) ஆகிய பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தலாம் என்பதில் எங்களுக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை. மேலே ஏற்கனவே விவாதிக்கப்பட்டபடி, புகாரில் உள்ள குற்றச்சாட்டுகளை அப்படியே ஏற்றுக்கொண்டாலும்கூட, குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கு எதிராகத் தொடர் நடவடிக்கை எடுக்க எந்த ஆதாரமும் இல்லை. குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–ஆன எம். ஸ்ரீகாந்துக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடர்வது என்பது, சட்ட நடைமுறையைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர வேறு எதுவுமில்லை என்பது எங்களது தீர்க்கமான கருத்தாகும். அந்த வகையில், அவரது மேல்முறையீடு அனுமதிக்கப்படுவதற்கு தகுதியானது.

28. முடிவாக, குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–ஆல் தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு அனுமதி மனு எண் 9156/2017 மூலமான குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. ஐதராபாத், மத்திய குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் எண் 4–க்கு எதிராக நிலுவையில் உள்ள குற்ற எண். 311/2010–ன் குற்றவியல் நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்படுகின்றன. அசல் புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு அனுமதி மனுக்கள் 9160–61/2017 மூலமான குற்றவியல் மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."